# மாநில அளவில் 'பொது சேவை மையங்கள் (ஸி.எஸ்.ஸி)' திட்டத்தை அமல்படுத்துவதற்கான வழிமுறைகள்

அரசின் அனைத்துச் சேவைகளும் ஒருங்கிணைக்கப்பட்டு மிகக்குறைவான கட்டணத்தில் குடிமக்களின் வீட்டு வாசலில் கிடைக்க வழிசெய்யும் குறிக்கோளுடன்தான் இந்திய அரசு 'தேசிய மின்நிர்வாகத் திட்டத்தை' (என்.ஈ.ஜி.பி) வடிவமைத்தது. என்ஈஜிபி திட்டத்தில், 26 மத்திய, மாநில மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட மிஷன் மோட் திட்டங்கள் மற்றும் மின்னியல் நிர்வாகத்தை நாட்டின் மூலைமுடுக்குகளிலெல்லாம் அதிவிரைவாகக் கொண்டுசெல்ல உதவும் 8 துணை உபகரணங்களும் அடங்கும். வலுமிக்க மூன்று படி முறையில், இணையதளம் மூலமாக "எங்கே எப்போது வேண்டுமானாலும்" கிடைக்கக்கூடிய தகவல் மற்றும் சேவைகளை கிராமப்புற இந்தியாவில் உருவாக்கவே என்ஈஜிபி விரும்புகிறது. அவை பின்வருமாறு:

**(1) இணைக்கும் வசதி: மாநிலமெங்கிலும் உள்ள பரந்த நெட்வொர்க் / நிக்நெட்**
**(2) தேசியத் தகவல் வங்கி/மாநிலத் தகவல் மையங்கள் (எஸ்.டி.ஸி.-க்கள்)**
**(3) பொதுச் சேவை மையங்கள் (ஸி.எஸ்.ஸி.-க்கள்)**

அரசு, தனியார் மற்றும் சமூக சேவை அமைப்புகள் கிராம மக்களுக்கு அளிக்கும் சேவைகளை அவர்களிடம் ஒருங்கிணைத்த விதத்தில் கொண்டு போய் சேர்க்கும் ஒரு முன்னணிச் சேவை மையமாகவே இந்திய அரசால் ஆரம்மிக்கப்பட்டுள்ள ஸி.எஸ்.ஸி. திட்டம் தன்னைப் பார்க்கிறது. அரசு, தனியார் மற்றும் சமூக சேவை அமைப்புகள் நாட்டின் மூலை முடுக்குகளிலெல்லாம் வசிக்கும் கிராம மக்களுக்கேற்றவாறு தங்களது சமூக மற்றும் வியாபாரக் குறிக்கோள்களை நிர்ணயித்துக் கொள்வதற்கென தகவல் தொழில்நுட்பம் சார்ந்த மற்றும் அதனைச் சாராத சேவைகளின் மூலம் ஒரு அடித்தளத்தை வளர்ப்பதுதான் இதன் நோக்கமாகும்.

எனவே, இந்த ஸி.எஸ்.ஸி.-க்களை, கிராமப்புறங்களுக்குச் சேவையைக் கொண்டுசேர்க்கும் வெறும் சேவை மையங்களாக மட்டுமே கருதிவிட முடியாது. மாற்றத்தை உண்டுபண்ணும் ஒரு கருவியே இதுவாகும் - கிராமப்புற குடிமகனை மையப்படுத்தி கிராமங்களில் தொழில் தொடங்குவதை ஊக்குவிக்கவும், கிராமத்திறன் மற்றும் வாழ்வாதாரங்களை மேம்படுத்தவும், சமூகப் பங்கேற்பு மற்றும் கூட்டு முயற்சியின் மூலம் சமுதாயத்தில் மாற்றத்தை ஏற்படுத்தவும் ஒரு முன்மாதிரியாக ஸி.எஸ்.ஸி. செயல்படுகிறது.

## ஸி.எஸ்.ஸி. திட்டத்தின் முக்கிய அனுமானங்கள்

* கிராமப்புறங்களில், அதாவது, பஞ்சாயத்துக்கள் அல்லது கிராமங்களில் பல்வேறு தகவல்கள் மற்றும் சேவைகளை கிராம மக்களுக்கு அளித்திட உதவும் பொதுச்சேவை மையங்கள் செயல்படுவதற்கு அரசின் நிதியுதவி மற்றும் பல்வேறு உதவிகள் தேவைப்படும். இதே மையங்கள் நகர்ப்புறங்களில் அரசின் சேவைகளைக் கொண்டுசெல்ல அனுமதி அளித்தாலே அவைகளால் செயல்பட முடியும்; சிலசமயம், அத்தகைய அனுமதி இன்றியே கூட அம்மையங்கள் செயல்படுகின்றன, இத்தகைய மையங்களைக் கிராமப்புறங்களில் அமைப்பதற்கான துணைக் குறிக்கோள்களாக கிராமச் சமுதாயத்தை மேம்படுத்துதல், சமவாய்ப்புக்களை ஏற்படுத்துதல், வேலைவாய்ப்பு / வருமானத்திற்கான சூழ்நிலையை ஏற்படுத்துதல் மற்றும் சமூக, பொருளாதார அமைப்புகளின் மூலம் மனித வளர்ச்சிக்கு வித்திடுதல் ஆகியவற்றைக் கூறலாம்.

* பொதுச்சேவை மையங்களின் மூலம் கிராமப்புற தகவல் மற்றும் தொலைதொடர்பு தொழில்நுட்பத் துறையில் அரசு-தனியார் கூட்டணியை உருவாக்கி அதைப் பலப்படுத்தி, பஞ்சாயத்து அல்லது கிராம அளவில் 'தொழில்முனைவோர் மாதிரி' ஒன்றை ஏற்படுத்தி, திட்ட அமலாக்கத்தில் அரசு சாரா/தனியார் நிறுவனங்களைப் பெரும் பங்காற்றச் செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும். முடிந்தவரையில், இப்பொதுச்சேவை மையங்கள் உள்ளூர் தொழில் முனைவோர்களாலேயே நடத்தப்படுமாறு பார்த்துக் கொள்ளவேண்டும்.

* பொதுச்சேவை மையங்கள் ஒவ்வொன்றும் பல்முனைசேவை அளிப்பவைகளாகவே செயல்படும். இவ்விடங்களில் வழங்கப்படும் சேவைகளில் கூடியவரை அரசு/தனியார் சேவைகளும் உள்ளூர் மக்களுக்குத் தேவைப்படக்கூடிய தகவல் மற்றும் அனைத்து உள்ளூர் சேவைகளும் சம அளவில் கலந்திருக்கும். சேவைகள் அனைத்தும் பிராந்திய மொழியில் இருத்தல் மிக அவசியமாகும். பல்வேறு பிரிவுகளில், பொதுச்சேவை மையங்களின் மூலம் அளிக்கப்படும் அனைத்துச் சேவைகளைப் பற்றிய விவரங்களையும் இத்திட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ள பிற்சேர்க்கை-1 (Annexure-1) தெரிவிக்கிறது.

* பொதுச்சேவை மையங்களின் தொழில் மாதிரியை வடிவமைக்கும்போது, வழங்கப்படும் சேவைகளின் வருவாய் ஆதாரங்களைக் கொண்டு அம்மையங்களை நடத்துதல் குறித்து அதிக கவனம் செலுத்தப்படும். வருவாய் ஈட்டக்கூடிய வாய்ப்பைப் பொறுத்தே ஒரு பஞ்சாயத்து அல்லது கிராமத்தில் அத்தகைய மையத்தின் அமைவிடம் தேர்ந்தெடுக்கப்படுகிறது. இதைப்பொறுத்தே, அளிக்கப்படும் சேவைகளின் விவரங்களும் தீர்மானிக்கப் படுகின்றன.

* நாடு முழுவதிலும் பொதுச்சேவை மையங்கள் அமைவதற்கு, கொள்கை மற்றும் நிதி அளவில், மத்திய அரசின் தகவல் தொழில்நுட்பத்துறை அனைத்துவிதமான பயனுள்ள உதவிகளையும் அளிக்கும். மாநில அளவிலான தகவல் தொழில்நுட்பத் துறை/மின்னியல் அரசுமுறை, அல்லது இவ்விரண்டும் இல்லாத பட்சத்தில் மாநில அரசு நியமிக்கும் வேறொரு துறையானது மாநில அளவில் இவ்விஷயத்தில் உதவிபுரியும் துறையாக விளங்கும். இத்திட்டத்தின்கீழ் பயனுற விரும்பும் மாநிலங்கள் ஏதாவதொரு நிறுவனம்/அமைப்பைத் (மாநில பொதுத்துறை நிறுவனம்/அமைப்பு/சங்கம்) தேர்ந்தெடுத்து, அதன் மூலம் இத்திட்டத்தை அமல்படுத்த மாநிலத் தகவல் தொழில்நுட்பத்துறைக்கு உதவுமாறு பணிக்கலாம். மாநில அரசின் தகவல் தொழில்நுட்பத் துறையானது, தான் விரும்பினால், இத்திட்டத்தில் நேரடியாகவும் பங்கேற்கலாம். இத்திட்டத்திற்கான மத்திய/மாநில அரசின் நிதியுதவி, இதற்கென அடையாளம் காணப்பட்டு, மாநில அரசால் நியமிக்கப்படும் நிறுவனங்களின் மூலம் அளிக்கப்படலாம்.

* கிராம மட்டத்திலான தொழில்முனைவோர்களுக்கு, பொதுச்சேவை மையம் ஒன்றினைத் தொடர்ந்து நடத்தத் தேவையான நிர்வாக மற்றும் தொழில்நுட்பத் திறமைகள் இல்லாமலும், உள்ளூர் சமூகத்தினருக்குத் தேவைப்படும் பல்வேறு சேவைகளை த் தொடர்ச்சியாக இனம்கண்டு அவற்றிற்கு உதவும் முறை தெரியாமலும் இருக்கலாம். எனவே, கிராமத்திலுள்ள தொழில் முனைவோர்களுக்கு மேல் ஒரு அடுக்கை உருவாக்கி (இதுவரை இவ்விஷயத்தில் கண்ட அனுபவங்கள் மூலம் தெரிந்து கொண்டதன் அடிப்படையில்,) அந்த அடுக்கின் மூலம் அத்திட்டத்திற்குத் தேவைப்படும் தொழில் ரீதியான மற்றும் தொழில்நுட்ப உதவிகளை வழங்குவதும் முக்கியமாகும். இத்தகைய ஏற்பாடு இப்பொழுது முதல் 'சேவை மைய நிறுவனம்' என்று அழைக்கப்படும். ஒரு மாவட்டத்திலோ அல்லது மாநிலம் ஒன்றின் ஒரு பகுதியிலோ உள்ள 100 அல்லது அதற்கு மேற்பட்ட பொதுச்சேவை மையங்கள் இந்த ஏற்பாட்டின் மூலம் பயனடையும். உள்ளூர் நிர்வாகத்தினரோ அல்லது மாநில அரசோ கூட சேவை மைய நிறுவனத்தின் பங்கை ஆற்றலாம்; ஆனால் அத்தகைட நிறுவனத்தை அமைக்க முடியாமல் போனாலன்றி அவ்வாறு செய்யாமலிருத்தல் நன்றாகும்.

* மிகவும் பின்பட்ட கிராமப்புறங்களில் பொதுச்சேவை மையங்களைத் தோற்றுவிப்பதன் மூலம், நாட்டின் தகவல் மற்றும் தொலைத்தொடர்பு தொழில்நுட்ப வளர்ச்சியில் சமநிலையை அடைவதுடன் இத்துறையில் நிலவும் இடைவெளியையும் குறைக்கும் வழிபிறக்கும்.

## அமலாக்க செயல்திட்டம்

பொதுச்சேவை மையங்கள் திட்டமானது கீழ்க்காணும் மூன்றடுக்கு அமல்படுத்தும் செயல்திட்டத்தை உள்ளடக்கியதாகும்:

(அ) 5-6 கிராமங்கள் கொண்ட ஒரு தொகுப்பிலுள்ள கிராமப்புற மக்களுக்கு சேவையளிக்கும் விதமாக, பொதுச்சேவை மையத்தின் முதல் மட்டத்தில் கிராமப்புற தொழில்முனைவோர் ஒருவர் இருப்பார்

(ஆ) இரண்டாவது/நடு மட்டத்தில் 'சேவை மைய நிறுவனம்' எனப்படும் ஒரு அமைப்பானது, கிராமப்புறத் தொழில் முனைவோரின் கட்டமைப்பை உருவாக்கி அதை வழிநடத்த உதவுகிறது. ஒன்று அல்லது இரண்டு மாவட்டங்களுக்கு ஒரு சேவை மைய நிறுவனம் என்ற அடிப்படையில் இந்நிறுவனம் அமைக்கப்படும் (ஒவ்வொரு மாவட்டத்திலும் 100-200 பொதுச்சேவை மையங்கள் இருக்கும்),

(இ) மூன்றாவது மட்டத்தில், மாநில அரசால் நியமிக்கப்படும் நிறுவனம் ஒன்று இருக்கும் - மாநிலத்தில் இத்திட்டத்தைச் செயல்படுத்தவும், இந்நிறுவனங்களுக்குத் தேவைப்படும் கொள்கை, இருப்பு மற்றும் பிற உதவிகளையும் இது அளிக்கும்.

## மற்ற நிறுவனங்கள்

**(அ) தேசிய அளவிலான சேவை மையம் (என்.எல்.எஸ்.ஏ.):** இத்திட்டத்திற்குத் தேவையான பொருள் மற்றும் மின்னணுக் கட்டமைப்பை இனம்கண்டு அதைச் சிக்கனமான முறையில் அமல்படுத்தும் வாய்ப்பை உருவாக்குவது சவால்கள் நிறைந்த ஒன்றாகும். மேலும், மக்களின் தேவைகளைச் சார்ந்து அமல்படுத்தப்படும் அனைத்துத் திட்டங்களும் தேசிய அளவில் ஒன்று சேர்ந்து விடும் குணம் படைத்தவையாகும். இத்தகைய பொருளாதாரச் சூழலில் மாநிலத்துக்குத் தேவைப்படும் செயல்திட்டங்கள் பயன் பெறவும், அனைத்துப் பணிகளையும் ஒருங்கிணைக்கவும் என்.எல்.எஸ்.ஏ.எனப்படும் தேசிய அளவிலான சேவை மையத்தை மத்திய தகவல் தொழில்நுட்பத் துறை நியமிக்கும்.

**(ஆ) சிறப்புப் பயனளிக்கும் கருவி (எஸ்.பி.வி.):** அரசு ஆதரவு, ஒருங்கிணைத்தல் ஆகியவை பொதுச்சேவை மையங்களைச் சரியாகச் சேர்ந்தடைகிறதா என்று தினமும் கண்காணிப்பதற்கென்று என்.எல்.எஸ்.ஏ.-யுடன் சேர்த்து, எஸ்.பி.வி. எனப்படும் 'சிறப்பு பயனளிக்கும் கருவி' ஒன்றும் நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் ஆரம்பகால அமல்படுத்தும் நிலையில் எஸ்.பி.வி. நிறுவப்பட்டு விடும் என்றாலும் பொதுச்சேவை மையங்களின் பிரிக்கமுடியாத ஒரு அங்கமாக இருக்கும் வகையிலேயே இவை இருப்பது மிக அவசியமானதாகும்.

## பல்வேறு நிறுவனங்கள்/அமைப்புகளின் பங்கு

### (அ) சேவை மைய நிறுவனம் (ஸர்வீஸ் செண்டர் ஏஜென்ஸி): முதன்மையான அமைப்பு

* பொதுச்சேவை மைய அமைப்பின் முக்கியமான அங்கம் சேவை மைய நிறுவனம் (எஸ்.ஸி.ஏ.) ஆகும். என்.எல்.எஸ்.ஏ. மற்றும் மாநில அரசு நியமிக்கும் நிறுவனம் (எஸ்.டி.ஏ.) ஆகியவை பொதுச்சேவை மையத்திட்டத்தை அந்தந்த இடங்களில் அமல்படுத்த எஸ்.ஸி.ஏ.-க்கு உதவும். தேவைப்படும் செயல்பாடு மற்றும் சேவைகளை இனம் காணுதல், மாநிலம் முழுவதுமுள்ள கட்டமைப்பை நன்கு பயன்படுத்துதல், கிராமப்புற தொழில்முனைவோரை (வி.எல்.ஈ.) இனம்கண்டு, தேர்ந்தெடுத்து அவர்களுக்குப் பயிற்சியளித்தல், பொதுச்சேவை நிறுவனங்களை ஏற்படுத்துதல் (நேரடியாகவோ அல்லது வி.எல்.ஈ. மூலமாகவோ) மற்றும் சேவைகளை அளித்து, நவீனமயமாக்குதல் ஆகியன இவற்றில் அடங்கும்.

* எஸ்.ஸி.ஏ.-வின் தொழில் மற்றும் நிதிநிலைத் திறனை ஒட்டியே பொதுச்சேவைகள் மையத்தின் வெற்றியும் தோல்வியும் பெரிதும் நிர்ணயிக்கப் படுகின்றன; ஏனெனில், இத்திட்டத்தின் நோக்கம் தகவல் தொழில்நுட்பத்தின் அம்சங்களைக் கிராமப்புறங்களுக்கு எடுத்துச் செல்வது அல்ல; மாறாக, நாட்டில் இதற்கு முன்னர்வரை தொழில் தொடங்கும் வாய்ப்பு சிறிதுகூட இல்லாத கிராமப்புறங்களில் 10000-க்கு மேற்பட்ட தொழில் வாய்ப்புக்களை உருவாக்குவதும், கிராம தொழில்முனைவோரையும் சமூகப் பங்கேற்பையும் வளர்ப்பதும்தான் ஆகும்.

## சேவை மைய நிறுவனத்தின் (எஸ்.ஸி.ஏ.) தகுதிக்கான நிபந்தனைகள்

* எஸ்.ஸி.ஏ. தான் அமையும் இடத்தைப் பற்றிய விவரங்களையும், ஏற்கனவே பொதுச்சேவைகள் மையம்/பூத் ஆகியவற்றை இந்தியாவின் ஏதாவது ஒரு கிராமத்தில் நடத்தியுள்ள அனுபவத்தையும் விண்ணப்பிக்கும் சமயம் பெற்றிருத்தல் அவசியம். தகுதிக்கான தேவைகளைப் பொறுத்து மற்ற நிறுவனங்களின் விண்ணப்பங்களும் பரிசீலிக்கப்படும்.

* சேவைகளை ஒருங்கிணைத்து அளிக்கு எஸ்.ஸி.ஏ.-வானது, பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள 15 பிரிவுகளுள் குறைந்தபட்சம் 5 பிரிவுகளிலாவது ஏதாவது சேவைகளை அளித்திருக்க வேண்டும். இத்திட்டத்தின்கீழ் எஸ்.ஸி.ஏ. அளிக்கவுள்ள சேவைகளுள் பொதுச்சேவைகள் மையம் ஆரம்பித்த 12 மாதங்களுக்குள்ளேயே வருவாய் ஆதாரம் போதாத காரணத்தால் சேவையில் சிறிது இடைவெளி ஏற்படும் நிலையும் உண்டாகலாம். பட்டியலில் குறிப்பிடப்படாத வேறுபல சேவைகளையும், அச்சேவைகள் உள்ளூர் மக்களின் சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டுக்கு உதவும் பட்சத்தில், பொதுச்சேவைகள் மையம் வழங்கலாம்.

* எந்த மாவட்டம் அல்லது மாநில அளவில் விண்ணப்பிப்பதற்கு முன், எஸ்.ஸி.ஏ, கீழ்க்கண்டவற்றைச் செய்திருக்க வேண்டும்:

1. அக்குறிப்பிட்ட இடத்தில் எஸ்.ஸி.ஏ. தரமுள்ள விவரமான கணக்கெடுப்பு ஒன்றை மேற்கொண்டிருக்க வேண்டும்;
2. மதிப்பீடுகளுக்குத் தேவையான மாறிலிகளை நன்கு வரையறுத்திருக்க வேண்டும்;
3. வழங்கப்படக்கூடிய சேவைகளை இனம் கண்டிருக்க வேண்டும்; மற்றும்
4. உள்ளூர் மக்களுக்குத் தேவைப்படுபவற்றை ஏக வாரியாகப் பிரித்திருக்க வேண்டும்.

* விண்ணப்பங்கள் பரிசீலிக்கப் படுவதற்கு எஸ்.ஸி.ஏ. கீழ்க்கண்டவற்றையும் கணக்கிட்டு வைத்துக் கொள்ளவேண்டும்:

1. சேவையில் பங்குபெறும் மற்றவர்களான பஞ்சாயத்து/கிராமத் தொழில்முனைவோர் ஆகியோருடன் வருவாய் பகிர்ந்தளிப்பு பற்றிய கொள்கையை விவாதித்தல்;
2. கிராமத் தொழில் முனைவோரைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்வு விதிமுறைகள்;
3. தொழில்முனைவோருக்கான பயிற்சித் திட்ட விவரங்கள் மற்றும் அட்டவணைகள்;
4. ஒவ்வொரு பொதுச்சேவைகள் மையத்திற்கும் ஆகும் செலவினங்கள் (கம்ப்யூட்டர் வாங்கும் மற்றும் செயல்பட வைக்கும் செலவு உட்பட), தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களில் உரிமம் பெற்ற ஸாஃப்ட்வேர் மற்றும் இணையதளம் அமைக்கும் வேலைகள் (சாதாரண கட்டுமானப் பணிகளின் செலவு இதில் அடங்காது) மற்றும் தொலைதொடர்பு சம்பந்தமான தொலைபேசி மற்றும் இதர தேவைகளுக்கான செலவுகள்.
5. வேலையில் இடைவெளி ஏற்படும் வரை தான் பின்பற்றப்போகும் ஒரு குறிப்பிட்ட 'தொழில் மாதிரி'யை உருவாக்குதல்

* எஸ்.ஸி.ஏ.-வால் சமர்ப்பிக்கப்படும் ஈ.ஓஐ.-ல் கிராமத் தொழில் முனைவோருக்கு அளிக்கப்பட உள்ள பயிற்சி விவரங்கள் பற்றியும், கட்டாயப் பயிற்சி அளிக்க எத்தனை நாள் அவர்களுக்குத் தேவைப்படும் என்றும் குறிப்பிடப் பட்டிருக்கவேண்டும்.

### (ஆ) கிராம அளவிலான தொழில்முனைவோர்கள் (வி.எல்.ஈ.)

பொதுச்சேவை மையங்களின் செயல்பாடு வெற்றியடைவதற்கு வி.எல்.ஈ மிக முக்கியமானவர்கள் ஆவர். அளிக்கப்படும் சேவைகளும், அவற்றின் தரமும் முக்கியமானது என்றாலும், வி.எல்.ஈ.-க்களின் தொழில் நடத்தும் திறனால் மட்டுமே பொதுச்சேவை மையங்களைத் தொடர்ந்து நடத்த முடியும். ஓரளவு நிதி ஆதாரம், தொழில் நடத்தும் திறன், வலுவான சமூகப் பிணைப்பு மற்றும் சமூகத்தில் அனைவராலும் மதிக்கப்படுபவர் என்ற குணங்களனைத்தும் வி.எல்.ஈ.-க்கு இருத்தல் அவசியம். பொதுச்சேவை மையங்களில் அளிக்கப்படும் சேவைகளின் தரம் பெரும்பாலும் வி.எல்.ஈ.-யின் தரத்தைச் சார்ந்தே இருக்கும். எனவே, சரியான வி.எல்.ஈ.-க்களைத் தேர்ந்தெடுத்து முறையான பயிற்சி அளிப்பது, பொதுச்சேவை மையங்களின் வெற்றியில் பெரும்பங்கு வகிக்கிறது.

**வி.எல்.ஈ.-க்கு இருக்கவேண்டிய குறைந்தபட்சத் தகுதிகள் என்று வரையறுக்கப்பட்டவை:**

* மேநிலைப் பள்ளிக்கூடம் ஒன்றில் குறைந்தது 10-ஆம் வகுப்பு வரை படித்துத் தேறியிருக்க வேண்டும்
* தேர்ந்தெடுக்கப் படும்போது கம்ப்யூட்டர் தகுதி இருப்பது நல்லது என்றபோதிலும் அவருக்கு முறையான கம்ப்யூட்டர் பயிற்சி இருக்கவேண்டிய கட்டாயமில்லை. எஸ்.ஸி.ஏ.-வால் நடத்தப்படும் பயிற்சித்திட்டத்தில் கணிப்பொறியை இயக்குதல், சாஃப்ட்வேர் மற்றும் மற்ற வகை கம்ப்யூட்டர் மொழிகள் பற்றித் தெரிந்து கொள்ளுதல் மற்றும் வரக்கூடிய பிரச்சனைகளைச் சிறிதளவேனும் சமாளிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும்.
* உள்ளூர் மக்களுடன் அந்த மொழியில் பேசுமளவிற்கு மொழித்திறனும், அபரிமிதமான தொடர்புகொள்ளும் வழிமுறைகளும் அவரிடம் இருக்க வேண்டும். பல விஷயங்களைக் கற்றுக்கொள்ளும் மனப்பாங்கும் இருத்தல் அவசியம். தமது தேவைகள் என்னவென்பதை மற்றவர்கள் எடுத்துரைக்க அவர் அவர்களுக்கு உதவிபுரிய வேண்டும். உள்ளூர் அளவில் ஒரு குழு அமைத்து அக்குழுவுக்கு ஊக்கம் அளிப்பவரும் அவருக்குத் தெரிந்திருக்கவேண்டும்.
* தொழிலின் அடிப்படை அம்சங்களை அறிந்துகொள்வது தொழில்முனைவோருக்கு அவசியமாகும்; அப்போதுதான், உள்ளூர் சந்தைத் தேவைகளைத் தெரிந்துகொள்ளவும் நிலைமையப் புரிந்துகொள்ளவும் தரமுள்ள சேவையை அளிக்கவும் அவரால் முடியும்.

**மாநில அரசு**

மாநில அரசு ஆற்றவேண்டிய பெரும்பங்கு பின்வருவனவற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது:

* பொதுச்சேவைகள் மையத்திட்டம் அமலாக்கப்படுவதை மேற்பார்வையிடுவதற்கு உயர்மட்டக்குழு ஒன்றை அமைத்தல்
* பொதுச்சேவைகள் மையத்திட்டத்தை ஒட்டி எஸ்.டி.ஏ.-வின் (மாநில அரசால் அமர்த்தப்படும் நிறுவனம்) செயல்பாட்டையும் எஸ்.ஸி.ஏ.-க்களைத் தேர்ந்தெடுக்கும் முறையையும் இக்குழு கண்காணிக்கும். தகவல் தொழில்நுட்பத் துறையின் 22.3.2005 தேதியிட்ட கடித எண்.1(2)/05-ஈ.ஜி.டி. மூலம் வெளியிடப்பட்ட 'திறன் வளர்ப்புக்' குறிப்புகளின்படி அமையவிருக்கும் உச்சபட்சக் குழுவானது உயர்மட்டக்குழுவின் பணிகளையும் புரியலாம். பொதுச்சேவை மையங்கள் தொடர்பான விஷயங்களில் உயர்மட்ட/உச்சபட்சக் குழு என்.எஸ்.எல்.ஏ.-வுடன் இணைந்து செயல்படவேண்டும்.
* கொள்கைகள், நெறிப்படுத்துதல் மற்றும் இதர தேவையான மாற்றங்களைக் கொண்டுவர உதவும் 'ட்ரைவர்'
* நிதியுதவி அளித்தல்
* மாநில அரசு மற்றும் மத்திய அரசு நிறுவனம்/மின்னியல் சேவை அளிப்பவரிடமிருந்து அச்சேவைக்குத் தேவையான நிதியுதவி பெறுவதற்கான நிறுவனம் ஒன்றை அமைத்தல்
* எஸ்.டி.ஏ./எஸ்.ஸி.ஏ.-க்களுக்குத் தேவையான அடிப்படைக் கட்டமைப்பு மற்றும் இதர உதவிகளை அளித்தல்
* வெவ்வேறு அரசு நிறுவனங்கள்/துறைகளான பள்ளிக்கூடங்கள், கிராமப் பஞ்சாயத்துக்கள், பொதுச்சுகாதர மையம் (பி.ஹெச்.ஸி.), சமூகத் தகவல் மையங்கள் (ஸி.இ.ஸி.) மற்றும் அஞ்சலகங்கள் ஆகியவற்றை மத்திய அரசின் ஆலோசனையுடன் அவற்றின் நிர்வாக மற்றும் அமைவிடக் கட்டமைப்புகளை பொதுச்சேவைகள் மையங்களுடன் ஒருங்கிணைக்கும் விதம் மற்றும் சாத்தியக்கூறு குறித்த பொருத்தமான நடவடிக்கை எடுத்தல்

கல்வி, சுகாதாரம், விவசாயம் மற்றும் வேலைவாய்ப்பு ஆகிய அரசுத்துறைகளில் நடப்பிலிருக்கும் வளர்ச்சித் திட்டங்களை பொதுச்சேவைகள் மையங்களுடன் ஒருங்கிணைக்கும் விதம் மற்றும் அளவு குறித்து முடிவெடுத்தல்

## மாநில அரசால் அமைக்கப்படும் நிறுவனம் (எஸ்.டி.ஏ.)

மாநில அரசால் அமைக்கப்படும் நிறுவனம் (எஸ்.டி.ஏ.) ஒன்றை அமைக்கும்படியும் மாநிலத்தின் பிரதிநிதியாக இருந்து பொதுச்சேவகள் மையத்திட்டம் நன்கு செயல்படுவதற்கு மாநில

அரசின் அனைத்து உதவிகளையும் அளிக்கவல்ல அதிகாரி ஒருவரையும் பணியிலமர்த்தும்படி அனைத்து மாநிலங்களும் வேண்டிக் கேட்டுக் கொள்ளப்படும். எஸ்.டி.ஏ. என்பது ஏதாவது ஒரு பொதுத்துறை நிறுவனம்/சங்கம் அல்லது மாநில அரசின் கட்டுப்பாட்டின் கீழ்வரும் ஏதேனும் ஒரு நிறுவனமாக இருக்க வேண்டும். 'ஸ்வான்' திட்டத்திற்கென நியமனம் செய்யப்பட்ட அதே நிறுவனத்தையே எஸ்.டி.ஏ.-வாக மாநில அரசு அமர்த்தினால்தான், இவ்விரு திட்டங்களையும் பயனுள்ள முறையில் ஒருங்கிணைப்பதை உறுதி செய்து கொள்ள முடியும். மாநில அரசின் பிரதிநிதி என்ற வகையில் பொதுச்சேவைகள் மையத்திட்டத்துக்குத் தேவையான கொள்கை அளவிலான ஆதரவை எஸ்.டி.ஏ. தரும் என்று நம்பப்படுகிறது. மின்னியல் அரசு மற்றும் தனியார் சேவைகளை முன்னேற்றி மேப்படுத்தத் தேவையான நீடித்து நிலைக்கக்கூடிய கட்டமைப்பை உருவாக்கவல்ல பொருத்தமான கொள்கைகளைத் த்ந்துதவுவதும் எஸ்.டி.ஏ.-வின் கடமையே ஆகும். அடிப்படியில், எஸ்.டி.ஏ.வின் பங்கு ஆரம்பநிலையில் கீழ்க்கண்டவாறு இருக்கும்:

* மின்னியல் நிர்வாகத்தை எப்போது வேண்டுமானாலும் அமல்படுத்தும் தயார் நிலை
* தேவையான கொள்கை, நிர்வாகம் மற்றும் நெறிமுறைப்படுத்துதல் ஆகியவற்றை மாநில அளவில் அளித்தல்;
* மாநில அரசு/மத்திய அரசிடமிருந்து பெறப்படும் நிதியுதவியை நல்லமுறையில் நிர்வகித்து, அது கிடைக்கும் முறையை மேற்பார்வையிட்டு அந்நிதியை நல்வழியில் செலவிடுதல்
* தற்போது நடைமுறையிலிருக்கும் ஐ.ஸி.டி.-யின் மூலமான மற்றும் அனைத்து அரசுத்திட்டங்களையும் பொதுச்சேவைகள் மையத்திட்டத்துடன் ஒருங்கிணைக்க வழிசெய்தல்
* பொதுச்சேவகள் மையம் அமையுமிடத்தை அடையாளம் காண உதவுதல்
* எஸ்.ஸி.ஏ. மற்றும் மாநில அரசுத்துறைகள்/மாவட்ட நிர்வாகத்துடனான உறவைப் பலப்படுத்தி அவைகளை அடிக்கடி தொடர்பில் இருக்கச் செய்வதன் மூலம் பொதுச்சேவைகள் மையத்தின் வாயிலாக அரசின் பல்வேறு சேவைகள் ஒருங்கிணைத்த முறையில் கிடைக்கச் செய்தல்
* மாநில அளவில் உள்ள அனைத்து நிறுவனங்கள்/அமைப்புகளுடனும் ஒன்றிணைந்து செயல்படுதல் மற்றும் கட்டமைப்பை உருவாக்குதல்
* உயர்நிலைக்குழு/உச்சபட்சக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் சேவை மைய நிறுவனங்களைத் (எஸ்.ஸி.ஏ.) தேர்ந்தெடுத்தல்
* பயிற்சி அளித்தல் மற்றும் திறன் வளர்த்தலுக்கு உதவுதல்
* விழிப்புணர்வு முகாம்களை நடத்துதல்
* 'ஸ்வான்' தொடர்புகளை உருவாக்குதல்

## தேசிய அளவிலான சேவை மையம் (என்.எல்.எஸ்.ஏ.)

தேசிய அளவிலான சேவை மையமானது பொதுச்சேவைகள் மையத்தை நடத்தத் தேவைப்படும் திட்ட நிர்வாக உதவியைத் தகவல் தொழில்நுட்பத் துறைக்கு அளிக்கும் நிறுவனமாகும். இவ்வுதவி அமல்படுத்தப்படும் நிலையில் மற்றும் ஆரம்பகால செயல்படுத்தப்படும் கட்டத்திலும் தொடரும்.

**திட்ட நிர்வாகம்:** இத்தகைய பெரிய அளவிலான ஒரு திட்டத்திற்கு, மேக்ரோ அளவில் திட்ட வடிவமைக்க மற்றும் அமல்படுத்தவும், திட்டத்தில் பங்கு கொண்டுள்ள அனைவருக்கும் சரியான வியூகம் அமைத்தல், செயல்திட்டம் மற்றும் நெறிமுறை ஆகியவைகளை வகுத்து, பொதுச்சேவைகள் மையத் திட்டத்தை நாடு முழுவதும் பயனுள்ள வகையில் அமல்படுத்தவும் ஒரு நிறுவனம் மிக அவசியமான ஒரு தேவையாகும்.

**திட்டமேற்பார்வை:** தகவல் தொழில்நுட்பத்துறை தனது திட்டங்களை அவ்வப்போது மறுபரிசீலனை செய்யவும் தேவைப்படும் ஒழுங்கு நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளவும் பொதுச்சேவைகள் மையத்திட்ட அமலாக்கலை என்.எல்.எஸ்.ஏ.-வானது நேரடியாகக் கண்காணிக்கும்.

**மாநிலங்களுக்கு உதவுதல்:** ஆர்.எஃப்.பி.-யை வளர்த்தல், ஏல நடவடிக்கைகளை நிர்வகித்தல், சேவை நிலை உடன்பாடுகளுக்கு (எஸ்.எல்.ஏ.) இறுதி வடிவம் கொடுத்தல் என்ற வகையில் பொதுச்சேவகள் மையத்திட்டத்தை அமலாக்க உதவும் பல்வேறு அம்சங்களில் மாநில அரசு/எஸ்.டி.ஏ.-க்கள் ஆகியவற்றுக்கு என்.எல்.எஸ்.ஏ. உதவிகரமாக இருக்கும்.

## சிறப்புச் செயல்பாட்டு அமைப்பு (எஸ்.பி.வி.)

அரசின் ஆதரவைக் கோருதல், தேசிய அளவில் தகவல் சேகரித்தல், செயல்பாட்டைக் கண்காணித்தல் ஆகிய பல்வேறு நடவடிக்கைகள் என்.எல்.எஸ்.ஏ.-வுக்கு அப்பாலும் மேற்கொள்ளப்பட வேண்டியனவாகும். அரசு உதவிக்கென உத்தரவாதம் அளிக்கப்பட்ட காலக்கெடு முடிவடைந்த பின்னரும் இத்திட்டங்களில் சிலவற்றை காலவரையறையின்றி நடத்த வேண்டியது மிகவும் அவசியமாகும். எனவேதான், மேற்குறிப்பிடப்பட்ட பணிகளைப் புரிய என்.எல்.எஸ்.ஏ.-வுடன் கூடுதலாக ஒரு சிறப்புச் செயல்பாட்டு அமைப்பு (எஸ்.பி.வி.) ஒன்றை ஏற்படுத்தும் நோக்கமும் இருக்கிறது. இத்திட்டத்தின் ஆரம்பகாலத்தில் உருவாக்கப்படும் எஸ்.பி.வி. கால வரையறையின்றி நடத்தப்படும் பொதுச்சேவைகள் மையத் திட்டத்தின் இன்றியமையாத ஒரு அங்கம் ஆகும்.

**கீழ்க்கண்ட முக்கியமான பங்குகளை எஸ்.பி.வி. ஆற்றும்:**

* பொதுச்சேவை மையங்கள் திட்டத்தின் கீழ் செயல்முறை மற்றும் நிதிநிலை நெறிகளை உருவாக்குதல்;
* ஒருங்கிணைந்து முடிவெடுக்க ஏதுவான செயல்திட்டம் ஒன்றை அளித்தல்;
* தகவல் சேகரித்தலை எப்போதுமே நிகழும் இயல்பான ஒரு விஷயமாக ஆக்குதல்;
* பொது அடையாளமான 'பொதுச்சின்னம்', ஆகியவற்றை உருவாக்குதல்

### அரசு உதவி என்பதன் விரிவான அர்த்தம்

* பொதுச்சேவை மையங்கள் திட்டத்தின் கீழ் முதலீட்டு மானியம் ஏதும் தரப்படப் போவதில்லை;
* எனினும், கிராமப்புறத் திட்டங்களின் வரலாறுகளைப் பார்க்கையில், திட்டங்கள் நிலைத்து நிற்பதற்கு நிதியுதவி எத்துணை அவசியமானது என்பது புரியும். எஸ்.ஸி.ஏ./வி.எல்.ஈ. ஆகியவற்றுக்கு ஊக்கம் அளிக்காமலோ அல்லது அதீத ஊக்கமளிப்பதோ அல்லது 'அதிகபட்ச' அரசு உதவிகளை உறுதிப்படுத்தும் செயல்திட்டம் ஒன்றை உருவாக்குவதோ இதன் நோக்கமே அல்ல; இவ்விரண்டாலும் அவற்றின் செயல்பாடு தேய்ந்துதான் போகும். எனவே, அரசைப் பொறுத்தவரையில் மிகப்பெரிய சவால் என்னவெனில், கிராமச் சந்தைகளில் உருவாகும் வருவாய் இடைவெளியை அடைப்பதும் அது தொடர்பானவைகளைச் சமாளிப்பதும்தான்.
* மேற்குறிப்பிட்டுள்ளவற்றின் அடிப்படையில், பொதுச்சேவைகள் மையத்திட்ட நிதி ஆதாரத்தின் ஒரு பகுதியையாவது அரசுச்சேவைகள் பார்த்துக் கொள்ளுமேயானால், தனியார் சேவைகளை மையப்படுத்தி நல்ல 'தொழில்மாதிரி' ஒன்றை உருவாக்குவது சுலபமாக இருக்கும். ஆயினும் ஜி2ஸி சேவைகளைச் செயல்படுத்துவதற்கு அதிக காலம் பிடிக்கும் என்பதால், பொதுச்சேவைகள் மையத்திட்டம் ஜி2ஸி சேவைகள் கிட்டாததால் அழிந்து போகாமல் பார்த்துக் கொள்ளப் படவேண்டியது மிக அவசியமாகும்.
* இப்பிரச்சினையைச் சமாளிப்பதற்கு 'அரசுச் சேவைகளிலிருந்து கிடைக்கும் கட்டாய வருவாய் உதவி' திட்டத்தின் மூலம், பொதுச்சேவைகள் மையத்திட்டம் ஆதரிக்கப் படவேண்டும் என்று முடிவெடுக்கப் பட்டுள்ளது. தேவைப்படும் உபரி உதவியைச் சரியாகத் தீர்மானிப்பதற்கு, போட்டி ஏலம் மற்றும் தேர்ந்தெடுக்கும் முறையாகிய 'விலை கண்டுபிடிக்கும்' முறை உதவுகிறது. இவ்வுதவி மத்திய அரசு (தகவல் தொழில்நுட்பத் துறையின் திட்ட ஆதார நிதியுதவி மூலம்) மற்றும் மாநில அரசுகளால் சம அளவில் பகிர்ந்து அளிக்கப்படுகின்றது. தன் பங்குக்கான வருவாய் உதவியை மாநில அரசானது தனது வருடாந்தர நிதிநிலை அறிக்கை (பட்ஜெட்) மூலமாகவோ அல்லது மத்திய அரசின் திட்டக்கமிஷன் மூலம் கிடைக்கும் கூடுதல் மத்திய உதவி நிதியின் மூலமாகவோ அளிக்கும்.

* ஜி2ஸி சேவை வருவாய்களின் சரியான மதிப்பீட்டை உறுதிசெய்யும் வகையில் பொதுச்சேவைகள மையத்திட்டத்தின் திட்ட வளர்ச்சி நிலையில் மேற்கொள்ளப்பட்ட ப்ரைஸ்வாட்டர் ஹவுஸ்கூப்பர் (பி.டபிள்யூ.ஸி.) நிறுவனத்தின் மாநில மின்னியல் தயார்நிலை அறிக்கை மற்றும் ஏ.ஸி. நீல்ஸன்-ஓ.ஆர்.ஜி. நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்ட கிராமச்சந்தை மதிப்பீடு ஆகியவற்றை மறுபரிசீலனை செய்வது முறையாகும். எஸ்.ஸி.ஏ.-க்களாக நியமிக்கப்படும் நிறுவனங்களுக்கு இத்தகவல்களை விலை கண்டுபிடிக்கும் செய்முறைக்கு முன்னர் அளிக்க வேண்டும்.

## பொதுச்சேவை மையங்களின் அமைவிடத்தை நிர்ணயம் செய்தல்

* ஆறு கிராமங்களுக்கு ஒரு பொதுச்சேவைகள் மையம் என்ற முறையில் நாடெங்கிலும் சமஅளவில் பரவி இருக்குமாறு கிட்டத்தட்ட ஒரு லட்சம் கிராமப்புற ஸ்டால்களை அமைப்பதே ஸி.எஸ்.ஸி. திட்டத்தின் முக்கியக் குறிக்கோளாகும். மேற்சொன்ன காரணிகளை ஒட்டி, மாநிலம் முழுவதும் ஒவ்வொரு வட்டத்திலும் எத்தனை பொதுச்சேவைகள் மையங்கள் அமைவது என்பதை அந்தந்த மாநில அரசுகள் தான் முடிவு செய்ய வேண்டும்.

* இக்காரணிகளின் அடிப்படையில் மாநிலத்தின் ஒரு வட்டத்தில் எங்கெல்லாம் ஸி.எஸ்.ஸி-க்கள் அமையலாம் என்று தீர்மானிக்கும் உரிமை எஸ்.டி.ஏ.-க்களுக்கு அளிக்கப்படலாம். ஒரு வட்டத்தில் உள்ள கிராம பஞ்சாயத்துக்கள் கணக்கிடப் பட்டதை விடக் குறைவாக இருந்தாலொழிய, ஒவ்வொரு கிராம பஞ்சாயத்திலும் ஒன்றுக்கு மேற்பட்ட ஸி.எஸ்.ஸி.-க்கள் அமையாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது எஸ்.டி.ஏ.-வின் கடமையாகும்.

* குறிப்பிட்ட சில காரணங்களினால் முதல் பத்தியில் கூறப்பட்டுள்ள காரணிகளின் அடிப்படையில் ஏதாவது ஒரு இடத்தில் பல ஸி.எஸ்.ஸி.-க்களை அமைக்க மாநில அரசு முடிவெடுத்தால், அதைச் செயல்படுத்துவதற்கு மும் மத்திய அரசின் தகவல் தொழில்நுட்பத்துறையின் முன் அனுமதியைக் கட்டாயம் பெற வேண்டியது மாநில அரசின் கடமையாகும்.

## இணையதள இணைப்பு வழிகள்

* எங்கெல்லாம் முடிகிறதோ, அங்கெல்லாம் ஸி.எஸ்.ஸி.-க்கள் 'ஸ்வான்' அமைப்பால் வழங்கப்படும் இணைப்பு வசதியையே உபயோகப்படுத்திக் கொள்ள வேண்டும். இதனால்தான், 'ஸ்வான்' திட்டத்தை அமல்படுத்தும்போது அவை ஸி.எஸ்.ஸி-க்களை சார்ந்தே இருக்கும்படி பார்த்துக்கொள்ளுமாறு மாநில அரசுகள் அறிவுறுத்தப் படுகின்றன. தகவல் தொழில்நுட்பத் துறையால் அங்கீகரிக்கப்பட்ட ஸ்வான் ஆர்.எஃப்.பி. (பி.பி.பி. மாதிரிகளுக்கு மட்டும்) அல்லது பில் ஆஃப் மெட்டீரியல்ஸ் (என்.ஐ.ஸி. மாதிரிகளுக்கு) ஆகியவை ஸி.எஸ்.ஸி. ஆர்.எஃப். பி. அளிக்கப்படுவதற்கு முன்னரே வழங்கப் படுமாறு பார்த்துக்கொள்ளுமாறும் மாநில அரசுகள் கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

* அனைத்து ஸி.எஸ்.ஸி.-க்களுக்கும் 'பிராட்பேண்ட்' இணையதள வசதியை அளிக்கும் பொருட்டு தகவல் தொழில்நுட்பத் துறையானது தொலைத்தொடர்புத் துறையுடன் தற்சமயம் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ளது. இவ்விரு நிறுவனங்களுக்கும் இடையே ஏற்படப்போகும் ஒப்பந்தத்தின் விவரங்கள் என்.எல்.எஸ்.ஏ. மூலமாக மாநில அரசுகளுக்குத் தெரிவிக்கப்படும். ஆயினும், 'ஸ்வான்' இணைப்பு மாதிரிக்கோ அல்லது தகவல்தொழில்நுட்பத் துறையின் முடிவுக்கு மாற்றாகவோ மாநில அரசு ஸி.எஸ்.ஸி. திட்டத்திற்காக ஏதேனும் செய்ய விழைந்தால், ஸி.எஸ்.ஸி. திட்டம் அமலுக்குக் கொண்டுவரப் படுவதற்கு முன்னரே அம்மாற்று வழியின் அனைத்து அம்சங்களையும் அலசி ஆராய வேண்டியது மாநில அரசின் கடமையாகும்.

* அனைத்து ஸி.எஸ்.ஸி.-க்களும் பிராட்பேண்ட் இணையதள வசதியைப் பெற்றிருக்கும். எனவே, அனைத்து மாநிலங்களும், மத்திய அரசின் தகவல் தொழில்நுட்பத்துறையின் ஆலோசனையுடன் ஸி.எஸ்.ஸி.-க்களுக்கு இணைப்பு வசதிகளை முடிவுசெய்த பின்னரே எஸ்.ஸி.ஏ.-க்களின் இறுதிக்கட்ட தேர்வை நடத்த முடியும்.

## எஸ்.ஸி.ஏ.-க்களைத் தேர்ந்தெடுக்கும் முறை

(அ) எஸ்.ஸி.ஏ.-க்கள் பொதுவான மற்றும் அனைவருக்கும் தெரியும் வகையில் ஏலமுறையில்தான் தேர்ந்தெடுக்கப்படுவர்.

(ஆ) எஸ்.ஸி.ஏ.-க்களைத் தேர்ந்தெடுப்பதற்கென மாநில அரசுகள் அந்தந்த அரசுகளின் தேவைக்கேற்ப 'திட்டத்திற்கான கோரிக்கை' எனப்படும் ஆர்.எஃப்.பி.-யைத் தயாரிக்க வேண்டும். ஏலமுறை நடவடிக்கைகளை நிர்வகிக்க மாநில அரசுகளுக்குத் தேவையான உதவிகளை என்.எல்.எஸ்.ஏ. அளிக்கும்.

(இ) தற்போது இருக்கும் கட்டிட மற்றும் தொலைத்தொடர்பு ஆதாரங்கள், தகவல் தொழில்நுட்பக் கொள்கை, அரசுச் சேவைகளின் தற்போதைய செயல்பாடு, மாநில அரசின் மின்னியல் தயார்நிலை, இருக்கும் ஸ்டால்கள் இயங்கிக் கொண்டிருக்கும் முறைகள், மின்னியல் சேவையை வழங்குவதற்கு மக்களிடம் பெறப்படும் கட்டணம் மற்றும் வருவாய் பகிர்ந்து கொள்ளும் முறை, ஆகியன குறித்த தகவல்கள் அனைத்தையும் என்.எல்.எஸ்.ஏ.-விற்கு வழங்குவது மாநில அரசின் வேலையாகும். ஆர்.எஃப்.பி.-க்கான 'டெம்ப்ளேட்'-ஐ கீழ்க்காணும் நான்கு வகைகளாகப் பிரிக்கலாம்:

* தொகுதி 1: திட்டத் தகவல் அறிக்கை - ஏலம் கேட்பவருக்கு ஸி.எஸ்.ஸி. திட்டம் குறித்த தகவல்களை அளிப்பதற்கு.
* தொகுதி 2: ஏலம் கேட்பவர்களுக்கான குறிப்புகள் - ஏலமுறையில் கலந்து கொள்ளும் ஏலம் கேட்பவர்களுக்குத் தேவைப்படும் குறிப்புகளை அளிப்பதற்கு,
* தொகுதி 3: 'முக்கியச் சேவை மட்ட ஒப்பந்தத்தின்' மாதிரி
* தொகுதி 4: கூடுதல் விவரங்கள் - மாநில அரசின் மின்னியல் நிர்வாகத் திட்டங்களின் நிலவரத்தைப் புரிந்து கொள்ள உதவும் அறிக்கைகள், புள்ளி விவரங்கள், கிராமப்புறத் தொழில்களின் பலன்கள், தொழில்நுட்ப வசதிகள், ஆகியன பற்றிய விவரங்கள் இதில் அடங்கும்.

(ஈ) சில குறிப்பிட்ட கட்டாயப் பிரிவுகளை உள்ளடக்கிய மற்றும் அனைவருக்கும் பொருந்தக்கூடிய ஆர்.எஃப்.பி-யின் நகல் ஒன்று இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இக்குறிப்பிட்ட கட்டாயப் பிரிவுகளில் மாற்றங்கள் ஏதேனும் செய்ய வேண்டுமானால் மத்திய அரசின் தகவல்தொழில்நுட்பத்துறையின் முன் அனுமதி பெற்றே அவ்வாறு செய்ய வேண்டும்.

## ஒப்புதல் மற்றும் திருத்தங்கள்

* ஸி.எஸ்.ஸி. திட்டத்திற்கென மாநில அரசால் நியமிக்கப்பட்ட எஸ்.டி.ஏ.-வினால் மாதிரி ஆர்.எஃப்.பி. மறுபரிசீலனை செய்யப்படும்; ஆர்.எஃப்.பி.-யை அளிப்பதற்குத் தேவையான ஒப்புதல் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமிருந்து பெறப்படும்.

* ஸி.எஸ்.ஸி. திட்ட அமல்படுத்துதலை எளிதாக்கும் பொருட்டு, தேவையான கொள்கை மற்றும் அணுகுமுறை மாற்றங்களை, வேண்டும் பட்சத்தில், மாநில அரசே மேற்கொள்ளலாம்.

* ஆர்.எஃப்.பி.-யை இறுதிசெய்வதற்கு முன்னதாக, மாநில அரசிடமிருந்து எஸ்.டி.ஏ. கீழ்க்கண்ட விஷயங்கள் ஒவ்வொன்றுக்கும் தனித்தனியாக ஒப்புதல் பெற்றுக்கொள்ளுமாறு பரிந்துரைக்கப் படுகிறது:

  * இருக்கும் ஸ்டால்களை ஒருங்கிணைக்கும் திட்டம்;
  * ஸி.எஸ்.ஸி. மையங்கள் அமையவிருக்கும் இடங்களின் எண்ணிக்கை;
  * ஸி.எஸ்.ஸி.-க்களை வகைப்படுத்துதல்;
  * அரசுச் சேவைகளுக்கான கட்டணம் நிர்ணயித்தல் மற்றும் அச்சேவைகளுக்கான வருவாய் பகிர்ந்து கொள்ளும் செய்முறைகளை உருவாக்குதல்;
  * திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப் படவிருக்கும் எஸ்.டி.ஏ.-க்களின் எண்ணிக்கை
  * எஸ்.டி.ஏ.-க்களுக்கான தகுதிகள் குறித்த் விதிமுறைகள்.

## அரசுத் துறைகள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துதல்

* ஸி.எஸ்.ஸி. திட்டம், அது செயல்படுத்தப்படும் விதம், ஒருங்கிணைந்த விதத்தில் அரசுச்சேவைகளை அளிப்பதில் ஒவ்வொரு துறையின் பங்கு ஆகியவை குறித்து அரசின் அனைத்துத் துறைகளிலும் விழிப்புணர்வை ஏற்படுத்தத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பது எஸ்.டி.ஏ./மாநிலத்தில் திட்டத்தை அமல்படுத்தும் நிறுவனத்தின் பொறுப்பாகும். எனவே, செயல்படுத்தும் நிறுவனமானது மாநில/மாவட்ட நிர்வாக அதிகாரிகளுக்கு இது குறித்து உதவும் பொருட்டு கருத்தரங்கங்கள்/பயிலரங்கங்கள் ஆகியவற்றையும் நடத்தலாம்.

* ஸி.எஸ்.ஸி.-க்களின் மூலம் ஒருங்கிணைக்கப்பட்ட அரசுச் சேவைகள் சரிவர மக்களை அடைவதை உறுதிசெய்யும் விதமாக சம்பந்தப்பட்ட துறைகளுடன் 'புரிதல் ஒப்பந்தம்' (எம்.ஓ.யு.) செய்துகொள்ளும் சாத்தியக்கூறையும் எஸ்.டி.ஏ./ மாநிலத்தில் திட்டத்தை அமல்படுத்தும் நிறுவனம் ஆராயலாம்.

## மேற்பார்வையிடுதல்

* பல்வேறு அரசுத்துறைகள் மற்றும் மாவட்ட அளவிலான அதிகாரிகளின் செயல்பாடுகளை ஒருங்கிணைத்து, ஸி.எஸ்.ஸி. திட்டம் நல்லமுறையில் அமல்படுத்தப்படுவதை உறுதிசெய்யும் பொருட்டு மாநில அளவில் மேற்பார்வைக்குழு ஒன்றையும் மாநில அரசு அமைத்துக் கொள்ளலாம்.

* ஸி.எஸ்.ஸி.-க்களின் செயல்பாட்டு முன்னேற்றத்தை மறுபரிசீலனை செய்வதற்கு இந்த மேற்பார்வைக்குழுவானது அடிக்கடி கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

* நாடு முழுவதிலுமுள்ள அனைத்து ஸி.எஸ்.ஸி.-க்களையும் இணையதளத்தின் மூலம் தொடர்ச்சியாக மேற்பார்வை புரியும் ஒரு திட்டத்தைத் தகவல் தொழில்நுட்பத்துறை உருவாக்கி செயல்படுத்தும். அனைத்து மாநிலங்கள் மற்றும் எஸ்.ஸி.ஏ.-க்கள் இதைக் கவனமாகப் பின்பற்றினால்தான் அவைகளுக்கு இத்திட்டத்தின் கீழ் மத்திய அரசால் வழங்கப்படும் நிதியுதவி கிடைக்கும்.

## நடைமுறையில் இருக்கும் தகவல் மையங்களை ஒருங்கிணைத்தல்

* எஸ்.ஸி.ஏ. அல்லது வி.எல்.ஈ. வடிவத்தில், இயங்கிக் கொண்டிருக்கும் அனைத்து ஸ்டால்களையும் ஸி.எஸ்.ஸி. திட்டத்தின் கீழ் கொண்டு வருவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மாநில அரசு மேற்கொள்ள வேண்டும்.

* இயங்கிக் கொண்டிருக்கும் ஸ்டால்களை நடத்துபவர்கள் தேவையான தகுதிகளைப் பெற்றிருக்கும் பட்சத்தில் ஸி.எஸ்.ஸி. திட்டத்திற்கான எஸ்.ஸி.ஏ.-க்களாக தேர்ந்தெடுக்கப் படுவதற்கான ஏலமுறையில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படலாம். அங்ஙனம் எஸ்.ஸி.ஏ.-க்களுக்குத் தேவையான தகுதிகளை அவர்கள் பெற்றிருக்கவில்லை என்றால், இயங்கிக் கொண்டிருக்கும் ஸ்டால்களை நடத்துபவர்களை வி.எல்.ஈ.-க்கான அரசுச் சேவைகளை வழங்குதல் மற்றும் ஒப்பந்ததின் விதிகளுக்குட்பட்டு இயங்குதல் ஆகியவற்றை ஒத்துக்கொள்ளுமாறு அனத்து முயற்சிகளையும் தேர்ந்தெடுக்கப்பட்ட எஸ்.ஸி.ஏ.-க்கள் மேற்கொள்ள வேண்டும். தேவைப்பட்டல், இருதரப்பினரும் இதுகுறித்த சட்ட மற்றும் வியாபார ஏற்பாடுகளையும் முன்னரே உறுதிசெய்து கொள்ளலாம்.

* மாநில அரசின் முயற்சிகளுக்கு பின்னரும் இயங்கிக் கொண்டிருக்கும் ஸ்டால்களை நடத்துபவர்கள் சிலர் தேவையான தகுதி இல்லாத காரணத்தால் ஏல நடைமுறையில் பங்குகொள்ள முடியாமல் போனால், அவர்களுக்கு எஸ்.ஸி.ஏ.-க்களுக்கு வழங்கப் படுவதைப் போன்றே அதே விதிகளின்படி ஜி2ஸி சேவைகள் மற்றும் 'ஸ்வான்' இணைப்பு வழங்குவது குறித்து மாநில அரசு யோசிக்கலாம்.

* சட்டரீதியாகவும், வியாபார மற்றும் நடைமுறை ரீதியாகவும் இதேபோன்ற மையங்களை ஸி.எஸ்.ஸி. திட்டத்தின் கீழ் ஒருங்கிணப்பதற்காக அம்மையங்களைம் நெறிமுறைப்படுத்தும் விதிமுறைகளை அவ்வப்போது மறுபரிசீலனை செய்வது மாநில அரசின் கடமையாகும்.

* விதிமுறைகளின்படி இயங்கிக் கொண்டிருக்கும் அரசு அல்லது அரசால் கட்டுப்படுத்தப்படும் ஸ்டால்/மையம் (உதாரணமாக வடகிழக்கில் இருக்கும் ஸி.எஸ்.ஸி.-க்கள்) பற்றி ஆர்.எஃப்.பி.-யில் குறிப்பிட்டு எஸ்.ஸி.ஏ. ஒன்றுக்குத் தருவதன் மூலம் அந்த எஸ்.ஸி.ஏ. ஏல நடைமுறையின்போது இவ்விஷயத்தைக் கருத்தில் கொள்ள ஏதுவாக இருக்கும்.

* மாநில அரசின் வருவாய் உதவியின்றி அமையவிருக்கும் வருங்கால ஸி.எஸ்.ஸி. போன்ற எந்த அமைப்புக்கும் தடையற்ற இணையதளச் சேவையை மாநில அரசு எப்போதுமே அளிக்கும்.

* இயங்கிக் கொண்டிருக்கும் சுய உதவிக் குழுக்கள்/தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் குடிமக்கள் நலன் சார்ந்த புகழ்பெற்ற, நல்ல நிறுவனங்கள்/குழுக்களை ஸி.எஸ்.ஸி. திட்டத்தின் கீழ், எஸ்.ஸி.ஏ.-க்கள்/வி.எல்.ஈ.-க்களாகப் பணிபுரியும்படியோ அல்லது அவைகளுக்குத் தேவைப்படும் (தகவல் தந்து உதவுதல் மற்றும் மனித் ஆற்றலைத் திரட்டுதல்) உதவியை அளிக்கும்படியோ மாநில அரசு பணிக்கலாம்.

## ஸி.எஸ்.ஸி.-க்களுக்கான நிதியுதவி மற்றும் நிதியுதவி சாராத ஆதரவு

### மத்திய அரசின் தகவல் தொழில்நுட்பத்துறையிடமிருந்து கிடைக்கும் உதவி

#### நிதியுதவி சாராத ஆதரவு

ஸி.எஸ்.ஸி.-க்களுக்குத் தேவையான இணைப்பு வசதிகளான எஸ்.ஸி.ஏ./வி.எல்.ஈ. தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு, தகவல் தொழில்நுட்பத் துறையானது அதற்குரிய அரசாணைகளை மாநில அளவிலான கட்டமைப்பு (ஸ்வான்) வழியாக அருகாமையிலுள்ள வட்டத் தலைமையக அளவிலான பி.ஓ.பி. (பாயிண்ட் ஆஃப் ப்ரஸன்ஸ்) மூலம் வெளியிடும். ஸி.எஸ்.ஸி.-க்கள் 'ஸ்வான்" சேவையை ஐந்தாண்டுகள் வரை கட்டணமின்றி உபயோகித்துக் கொள்ளலாம். இதில் தேவைப்படும் உபகரணத்திற்கான செலவு மற்றும் ஐ.எஸ்.பி. கட்டணத்தை சம்பந்தப்பட்ட எஸ்.ஸி.ஏ. அல்லது வி.எல்.ஈ.தான் செலுத்தவேண்டும்.

#### நிதியுதவி

இத்திட்டத்திற்குத் தேவையான நிதி ஆதாரங்களை தேசிய அளவில் என்.எல்.ஸி.ஏ.-வின் மூலமாகத் திரட்ட முடிவு செய்யப் பட்டுள்ளது. மத்திய/மாநில அரசின் வெவ்வேறு துறைகளின் பல்வேறு மின்னியல் நிர்வாகச் சேவைகளை ஸி.எஸ்.ஸி.-க்கள் மூலமாகச் செயல்படுத்துவதற்காக மத்திய அரசின் தகவல் தொழில்நுட்பத் துறை அந்தந்தத் துறைகளுடன் இது குறித்து விவாதிக்கும். தொழில்முனைவோரின் முயற்சிகளை ஊக்குவிக்கவும் ஸி.எஸ்.ஸி.-களை நீண்டகாலம் வரை வெற்றிகரமாக நடத்துவதறாகவ்ம் மத்திய அரசின்/மாநில அரசின் நிதி உத்வி (அடிக்கடி மற்றும் அவ்வப்போது ஆகும் செலவினங்கள், நிதி/ சேவைகள்) மற்றும் பிற உதவிகள் கிடைக்கும். மேலும் இத்தகைய பெரிய பரிணாமமுள்ள ஒரு திட்டத்துக்கென நிதி ஆதாரத்தை பணச்சந்தைகள், பங்குச்சந்தைகள், கடன்வசதி ஆகியன மூலம் திரட்ட வேண்டிய தேவையும் உணரப்பட்டுள்ளது. அரசு அளிக்கும் நிதி உதவியும் மேற்சொன்ன நிதி திரட்டும் முயற்சியை ஒட்டியே இருப்பது நன்மை பயக்குமாறு இருக்கும்.

### மாநில அரசிடமிருந்து கிடைக்கும் உதவிகள்

#### நிதியுதவி சாராத ஆதரவு

இத்திட்டத்தின் பிற்சேர்க்கை-5-ல் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளின்படி மாநில அரசின் நிதியுதவி சாராத ஆதரவு இருக்கும். மேலும், ஸி.எஸ்.ஸி.-களை கால் செண்டர் வேலைக்கும்/அதற்கான பயிற்சிக்கும் உபயோகப் படுத்தும் மாநில அரசு, அரசு அதிகாரிகளின் சரிபார்த்தலுடன் கிராம அளவில் அடிப்படைத் தகவல் திரட்டுதல் மற்றும் இணையதளத் தகவல் ஒருங்கிணைத்தல் ஆகிய வேலைகளிலும் வி.எல்.ஈ.-க்களை ஈடுபடுத்தலாம்.

இருதரப்புக்கும் இடையே நிலவும் நிபந்தனை மற்றும் விதிமுறைகளின் அடிப்படையில் இச்சேவைகளுக்கு மாநில அரசு எஸ்.ஸி.ஏ./வி.எல்.ஈ.-க்களுக்கு நிதிவசதி அளிக்கும்.

## நிதியுதவி

மாநில அரசுகள் மத்திய அரசின் தகவல் தொழில்நுட்பத் துறையுடன் இணைந்து பணியாற்றி அரசுச்சேவைகளை வளர்த்து குறிப்பிட்ட சில வேலைகளான பயிற்சி, கல்வி, தகவல் திரட்டுதல், ஆகியவற்றின் மூலம் பொதுச்சேவைகள் மையத் திட்டத்தை நடத்தத் தேவையான நிதிஆதாரங்களை உருவாக்கலாம். தேவைப்பட்டால், இவ்விஷயத்தில் தக்க வருவாய் ஈட்டும் மாதிரி ஒன்றை மாநில அரசுத்துறைகளும் எஸ்.ஸி.ஏ./வி.எல்.ஈ.-க்களும் தங்களிடையே உருவாக்கிக் கொள்ளலாம். மேலும், மாநில அரசுகள் எஸ்.ஸி.ஏ.-க்களுக்கு சிறப்புச் சலுகைகளை அளித்து, திட்டத்தின் முதல் 3-5 ஆண்டுகளுக்கு அதேபோன்ற வேறு அமைப்புகளை ஆதரிக்காமல் இருக்கலாம்.

## கிராமப்புற வளர்ச்சி வங்கியிடமிருந்து (நபார்ட்) ஆதரவு

'நபார்ட்' வங்கியின் 'கிராமப்புறக் கட்டமைப்பு வளர்ச்சி நிதி'யின் கீழ் வழங்கப்படும் நிதியுதவியை நாடு முழுவதும் 'கிராம/ புறநகர் தகவல் மையங்களை' ஏற்படுத்துவதற்கு உபயோகித்துக் கொள்வதென்று மத்திய அரசு முடிவெடுத்திருக்கிறது. இத்தகைய மையங்களை அமைக்க முன்வரும் நிறுவனக்களுக்குப் பகிர்ந்தளிக்கும் வண்ணம் இந்த நிதி உதவியானது மாநில அரசுக்குக் கடனாக வழங்கப்படும். ஸி.எஸ்.ஸி.-க்கள் மற்றும் கிராம/ புறநகர் தகவல் மையங்கள் அளிக்க இருக்கும் சேவைகளின் ஒரே மாதிரியான தன்மையைக் கருத்தில் கொண்டு அம்மையங்களை அமைக்க 'நபார்ட்' மூலம் கிடைக்கும் உதவியை ஏற்க மாநில அரசு முடிவெடுக்கலாம். இதற்கான நெறிமுறை மற்றும் நிபந்தனைகளை சம்பந்தப்பட்ட அனைவருக்கும் 'நபார்ட்' வங்கி தனித்தனியே தெரிவிக்கும்.

## அமல்படுத்துவதற்கான செய்முறை

* தகவல் தொழில்நுட்பத் துறை, முறையான செய்முறை ஒன்றின் மூலம் தேசிய அளவிலான சேவை நிறுவனம் (என்.எல்.எஸ்.ஏ.) ஒன்றை இனம் காணும். செயல்திட்டத்தின் விதிகளின் அடிப்படையில் அந்நிறுவனமானது பல்வேறு திட்ட அளவிலான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

* என்.எல்.எஸ்.ஏ.-வானது விரிவான செயல்திட்டம் ஒன்றை வரைந்து, அதில் சம்பந்தப்பட்ட அனைவரின் பங்கு மற்றும் பொறுப்புகளை செயல்திட்ட விவரங்களுக்குட்பட்டு வரையறையும் செய்யும்.

* இத்திட்டத்தில் பங்குபெற விரும்பும் மாநில அரசு, தனது அவ்விருப்பத்தை மத்திய அரசின் தகவல் தொழில்நுட்பத் துறைக்கு எழுத்து மூலம் மாநில அரசால் நியமிக்கப்படும் நிறுவனத்தின் பெயர், அதிகாரிகள் மற்றும் பிற விவரங்களைத் தெரிவிக்க வேண்டும். அதன் பின்னர் தகவல் தொழில்நுட்பத் துறை, என்.எஸ்.எல்.ஏ. மற்றும் மாநில அரசு/மாநில அரசால் நியமிக்கபடும் நிறுவனம் ஆகியவற்றிடையே ஒப்பந்தச் செயல்முறை ஒன்று உருவாக்கப்படும்.

* இத்திட்டத்தில் பங்கு பெறும் மாநில அரசுகள் பின்வருபனவற்றைக் குறிப்பிட வேண்டும்:

1. சம்பந்தப்பட்ட அனைவரின் பொறுப்பு மற்றும் வேலையைக் குறிப்பிடும் கொள்கை மற்றும் செயல்முறைகள்;
2. ஸி.எஸ்.ஸி.-க்களின் மூலமாக அரசின் சேவைகளை அளிக்க வகைசெய்யும் மாநில அரசின் கொள்கைகள் மற்றும் விதிமுறைகள்;
3. சம்பந்தப்பட்ட அனைவரும் பகிர்ந்துகொள்ளும் 'வருவாய் பகிர்ந்து கொள்ளும் கொள்கை';
4. எஸ்.ஸி.ஏ. மற்றும்/அல்லது வி.எல்.ஈ.-க்களுக்கு இடையிலான சேவை மட்ட ஒப்பந்தங்கள் (எஸ்.எல்.ஏ.).

* அமல்படுத்தும் செய்முறையை ஊக்குவிப்பதற்கும் தேவைப்படும் ஆரம்ப வேகத்தைத் தருவதற்கும், மத்திய அரசின் தகவல் தொழில்நுட்பத்துறையானது, அமல்படுத்த விரும்பும்

எஸ்.ஸி.ஏ.-க்களை அவைகளின் 'விருப்பத்தைத் தெரிவிக்க' (எக்ஸ்பிரஷன் ஆஃப் இண்ட்ரஸ்ட்) அழைக்கும். அத்தகைய எஸ்.ஸி.ஏ.-க்கள் பொதுச்சேவைகள் மையங்களின் அமல்படுத்தும் வியூகங்களை வளர்க்கும் பொருட்டு தகவல் தொழில்நுட்பத்துறை/என்.எல்.எஸ்.ஏ.-வினால் அழைக்கப்படும். தக்க சமயத்தில், என்.எல்.எஸ்.ஏ./மாநில அரசால் நியமிக்கப்படும் நிறுவனம் இந்த எஸ்.ஸி.ஏ.-க்களை இறுதித் தேர்வு செய்முறைக்காக அழைக்கும்.

* தேவைப்படும் பின்னணி விவரங்களை அளித்து தனது விருப்பத்தைத் தெரிவிக்கும் எஸ்.ஸி.ஏ, 'தொழில் மாதிரி' குறித்த தனது திட்டங்கள், சம்பந்தப்பட்ட மாவட்டங்களில் அமையவிருக்கும் ஸி.எஸ்.ஸி.-க்களின் வரைபட மாதிரி, வி.எல்.ஈ.-க்களைத் தேர்ந்தெடுக்கும் வழிமுறை, எஸ்.ஸி.ஏ. மற்றும் வி.எல்.ஈ. ஆகியவற்றுக்கிடையேயான பயிற்சித் திட்ட ஒப்பந்தம் ஆகியன பற்றிய அனைத்துத் தகவல்களையும் தர வேண்டி நேரிடும்

* என்.எல்.எஸ்.ஏ./மாநில அரசால் நியமிக்கப்படும் நிறுவனமே எஸ்.ஸி.ஏ.-க்களை இறுதியாகத் தேர்ந்தெடுக்கும் பணியைப் புரிகிறது. இத்தேர்வின் பொழுது தகவல் தொழில்நுட்பத்துறை மற்றும் மாநில என்.ஐ.ஸி. பிரிவு ஆகியவற்றின் உதவியையும் பெற்றுக் கொள்ளலாம். வி.எல்.ஈ.-க்களைத் தேர்ந்தெடுக்க எஸ்.ஸி.ஏ. என்.எல்.எஸ்.,ஏ.-உடன் இணைந்து செயலாற்றும்.

* பங்கேற்கும் மாநில அரசானது, தகவல் தொழில்நுட்பத்துறை / என்.எல்.எஸ்.ஏ.-உடன் ஆலாசனை செய்து, தகவல் தொழில்நுட்பத்துறை, மாநில என்.ஐ.ஸி. பிரிவு மற்றும் இத்துடன் தொடர்புடைய மற்றவர்கள் அடங்கிய 'மாநில அளவிலான மேற்பார்வையிடும் குழு'வை அமைத்து அமல்படுத்தும் செயல்முறையை மேற்பார்வையிட வேண்டும்.

* இதற்கான ஒப்புதல் வழங்கப்பட்ட நாளிலிருந்து 45 நாள்களுக்குள் ஸி.எஸ்.ஸி.-யை இயக்க வைக்க வேண்டிய பொறுப்பு எஸ்.ஸி.ஏ.-க்கு உள்ளது.

* என்.எல்.எஸ்.ஏ., எஸ்.ஸி.ஏ. மற்றும் மாநில அரசால் நியமிக்கப்பட்ட நிறுவனம் ஆகியவற்றிடையே கையெழுத்தாகும் ஒப்பந்தமானது பாரா 4.2.2-ல் குறிப்பிட்டுள்ளபடி பொதுச்சேவைகள் மையத்திட்டத்தின் மூலம் வழங்கப் படவுள்ள மாநில அரசுச் சேவைகளுக்கான வருவாய் குறித்து உத்தரவாதம் அளிக்கும். இச்செயல்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மற்ற நெறிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் தவிர, மற்ற விஷயங்களும் இந்த ஒப்பந்தத்தில் அடங்கும்.

### ஜி2ஸி சேவைகளைச் செயல்படுத்துவதற்கான திட்டம்

ஜி2ஸி சேவைகள் கிடைப்பதைப் பொறுத்தே வருவாய் ஆதாரம் இருக்குமென்பதால், மாநில அரசு ஜி2ஸி சேவைகளை அரசின் முக்கியச் சேவைகளுக்காகவாவது விரைவில் செயல்படுத்த வேண்டும்மென்று பரிந்துரைக்கப்படுகிறது. இதற்கான தொழில்நுட்பக்கலையானது, இணைப்புத் திட்டங்களுடன் சேர்ந்து கூடியவரையில் எஸ்.ஸி.ஏ.-க்களுக்கு ஏத்வான தொழில்சூழல் பின்னணியை உருவாக்கும் வகையில் முறைப்படுத்தப்பட வேண்டும்.

## கிராமப்புறப் பொதுச்சேவை மையங்களின் மூலம் வழங்கப்படும் சாத்தியக்கூறுகளுடைய பொருளாதார மற்றும் சமூகச் சேவைகள்

கிராமப்புற பொதுச்சேவை மையங்களின் மூலம் வழங்கப்படும் சாத்தியக்கூறுகளுடைய பொருளாதார மற்றும் சமூகச் சேவைகளின் பட்டியல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. இதில் குறிப்பிடப்பட்டுள்ள சேவைகளைத் தவிர கிராம மக்களுக்கு உதவிகரமாக இருக்கும் மேலும் பல சேவைகளும் இம்மையங்களின் மூலம் வழங்கப்படலாம்.

### 1. விவசாயம்

1.1 பயிர் வளர்ப்பு (விதைகளின் வகைகள், நீர்ப்பாசனம், ஆகியன)
1.2 கருவிகள் (வாங்குதல், விற்றல், வாடகைக்கு எடுத்தல்)
1.3 விற்பனை செய்தல்
1.4 விலை நிர்ணயம் செய்தல்
1.5 நிதியுதவி (சிறுகடன்வசதி)
1.6 பயிர் காப்பீடு
1.7 வானிலை அறிக்கைகள்
1.8 பேரழிவு முன்னெச்சரிக்கைகள்

2. **கால்நடைப் பாதுகாப்பு**
   - 2.1 கால்நடை நலம் & மருத்துவச் சேவைகள்
   - 2.2 நிதி & திட்டங்கள்
   - 2.3 கால்நடை வகைகள்
   - 2.4 உற்பத்தி (சிறந்த முறைகள்)
   - 2.5 கால்நடை வளர்ச்சி

3. **மக்களுக்கான அடிப்படை சேவைகள்**
   - 3.1 செய்முறைகள்
   - 3.2 மதிப்பீடு
   - 3.3 படிவங்கள்
   - 3.4 தொடர்பு கொள்ளும் கையேடு
   - 3.5 துயர்துடைப்பு
   - 3.6 திட்டங்கள் & பலன்கள்
   - 3.7 பிறப்பு & இறப்பு சான்றிதழ்கள்
   - 3.8 திருமணத் தகவல் மையங்கள்
   - 3.9 எஸ்.டி.டி., பி.ஸி.ஓ. மற்றும் ஸைஃபர் கஃபே
   - 3.10 அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்

4. **சுகாதாரம்**
   - 4.1 தடுப்பூசி போடும் தினம் குறித்த அட்டவணை
   - 4.2 கர்ப்பவதிகள் நலம் பேணுதல்
   - 4.3 குடும்பக் கட்டுப்பாடு
   - 4.4 மருந்துகள்
   - 4.5 ஆம்புலன்ஸ் சேவைகள் மற்றும் போக்குவரத்து
   - 4.6 மருத்துவமனை/ஆரம்ப சுகாதார நிலையத் தகவல்கள்
   - 4.7 இரத்த வங்கி
   - 4.8 உயிர்காக்கும் மருந்துகள்
   - 4.9 மருத்துவர்கள் பற்றிய விவரங்கள்
   - 4.10 மருத்துவரைப் பார்க்கும் நேரம் பற்றிய விவரங்கள்
   - 4.11 இரத்தபரிசோதனை மையங்கள்
   - 4.12 பொருட்கள் நிர்வாகத் திட்டம் (மருந்துகள்)

5. **கல்வி**
   - 5.1 பள்ளிகள்/கல்லூரி/பல்கலைக்கழகம் பற்றிய விவரங்கள்
   - 5.2 பாடத்திட்டம்
   - 5.3 தேர்வு முடிவுகள்
   - 5.4 வெளிநாடுகளில் கல்வி பயிலுதல்
   - 5.5 திட்டங்கள்/உதவித்தொகைகள்
   - 5.6 ஆலோசனை/அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்

6. **நிலம்/சொத்து விவரம்**
   - 6.1 நில ஆவணங்கள்
   - 6.2 சொத்து மாற்றம் மற்றும் பதிவுசெய்தல்
   - 6.3 சொத்து வரி
   - 6.4 சொத்து குறித்த விதிகள் & நெறிமுறைகள்
   - 6.5 நிலவருமானச் சான்றிதழ்கள்

7. **வேலைவாய்ப்பு**
   - 7.1 வேலை வாய்ப்புகள் (இணைப்பகங்கள்)
   - 7.2 பதிவுசெய்தல்
   - 7.3 சுயவேலைவாய்ப்புத் திட்டம்

**8. சமுகநலம்**

- 8.1 திட்டங்கள் & பலன்கள்
- 8.2 தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் குறித்த கையேடு
- 8.3 குடிமக்களின் உரிமைகள்

**9. பொதுச்சேவைகள்**

- 9.1 விண்ணப்பங்கள்
- 9.2 செலுத்தப்பட வேண்டிய பில் குறித்த விவரங்கள்
- 9.3 பல்வேறு சேவைகள் குறித்த பில்களைப் பெற்றுக்கொள்ளுதல்
- 9.4 துயர்துடைப்பு

**10. தொழில்**

- 10.1 செய்முறை
- 10.2 மதிப்பீடு
- 10.3 படிவங்கள்
- 10.4 திட்டங்கள் (மானியக் கடன்கள்)
- 10.5 திட்டங்கள் & விதிகளுக்குட்பட்டு நடத்தல் (வாட், ஆர்.டி.ஓ.)
- 10.6 டி.டி.பி., விவரப்பதிவு வேலை மற்றும் பி.பி.ஓ.-க்கள்

**11. பஞ்சாயத்து விஷயங்கள்**

- 11.1 பிறப்புச் சான்றிதழ்
- 11.2 இறப்புச் சான்றிதழ்
- 11.3 பொது இணைப்புகள் (தண்ணீர், முதலியன)
- 11.4 சொத்து மாற்றம் மற்றும் பதிவுசெய்தல்
- 11.5 வரி பற்றிய விதிமுறைகள்
- 11.6 வரி செலுத்துதல்
- 11.7 உரிமம் (லைசென்ஸ்) & சலுகைகள்
- 11.8 அனுமதி உரிமம் (பெர்மிட்)

**12. நுகர்வோர் நலம்**

- 12.1 நுகர்வோர் உரிமைகள்
- 12.2 நுகர்வோர் நீதிமன்றங்கள்
- 12.3 சட்ட உதவி

**13. சுற்றுப்புற சூழல்**

- 13.1 மாசுபடுதலைத் தடுக்க உதவும் விவரங்கள்/படிவங்கள்
- 13.2 சுற்றுப்புற சூழல்
- 13.3 துயர்துடைப்பு

**14. சுற்றுலா & போக்குவரத்து**

- 14.1 ஹோட்டல் அறை காலியாக இருப்பது பற்றிய நிலை/முன்பதிவு செய்தல்
- 14.2 நீண்டதூரப் பேருந்து பயணத்திற்கான முன்பதிவு செய்தல்
- 14.3 போக்குவரத்து வழிகள் மற்றும் சுற்றுலாவிற்கான இடங்கள் குறித்த விவரங்கள்

**15. பொழுதுபோக்கு அம்சங்கள்**

- 15.1 திரைப்படம் முதலியவற்றைத் திரையிடத் தேவையான வீடியோ மற்றும் கேபிள் டி.வி. சாதனங்கள்

**ஆதாரம்:** www.mit.gov.in/download/cscguidelines.pdf